# மேசி ஜெயறோசா



31 ஆம் நாள் நினைவு மலர்
13.06.2022
குருநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேசி ஜெயறோசா யேசுராசா
## வாழ்க்கைக் குறிப்புகள்

1. பிறப்பு : 09. 04. 1954 குருநகர்

2. பெற்றோர் : எசெக்கியேல்
றெஜினா

3. உடன்பிறப்புகள் : யோககுமார், மேளின், ஜெயக்குமார்.

4. கல்வி : யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம்
(க. பொ. த. உ / த)

5. பணி : விஞ்ஞான ஆசிரியர் (1983 - 2014)
யா / புனித பத்திரிசியார் கல்லூரி


6. திருமணம் : 21. 10. 1992
கணவர் : அ. யேசுராசா

7. பணி ஓய்வு : 2014

8. வெளிநாட்டுப் பயணங்கள் : 2001 - சிங்கப்பூர்
2002 - தமிழ்நாடு
2016 - கனடா
2018 - ஜெருசலேம்
2020 - அவுஸ்திரேலியா, சிங்கப்பூர்.

9. மறைவு : 13. 05. 2022 - தெல்லிப்பழை
10. நல்லடக்கம் : 16. 05. 2022 - யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடுதலைச் செபம்!

என் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவே, உம்மை வாழ்த்துகிறேன், போற்றுகிறேன், துதிக்கிறேன், ஆராதிக்கிறேன், உமக்கு நன்றி கூறுகிறேன். என் உடல் ஆவி ஆன்மா அனைத்தையும் எனக்குள்ள யாவற்றையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். நீரே என் ஆண்டவர். நீரே என் மீட்பர். நீரே என் அரசர். நான் உமக்கு மட்டும் சொந்தம். என் உடலையும் ஆவியையும் ஆன்மாவையும் என் சிந்தனை, சொல், செயல், உணர்வுகள், என் வாழ்வையும், என் வீடு, நிலபுலம், உடைமைகள், உயிருள்ள உயிரற்ற பொருள்களையும் சீர்குலைக்கும், எல்லாத் தியாகங்களையும் வஞ்சிக்கும், ஏமாற்றும், அழித்தொழிக்கும் ஏவல் பிசாசுகளையும் யேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் கட்டி அவருடைய திருப்பாதத்திலே தள்ளுகிறேன்.

ஏனெனில், நாங்கள் அனைவரும் அவருடைய விலைமதிக்கப் பெறா திரு இரத்தத்தினால் விலைகொடுத்து வாங்கப்பட்டவர்கள். அவரே எங்கள் ஆண்டவர். அவரே எங்கள் மீட்பர். நாங்கள் என்றென்றும் அவருக்கு மட்டுமே சொந்தம். இதோ! ஆண்டவரின் திருச்சிலுவை. எதிரிகளே, தீய ஆவிகளே ஓடிப்போங்கள். தாவீதின் குலத்தவரும், யூதாவின் இரக்கமுள்ள யேசுகிறிஸ்து வெற்றிகொண்டார்!

(லூக்.17 : 9 - 11, மத். 28 : 19 - 20, எபேசி. 1: 7, அப். 20 : 28, யாக. 4 : 8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல் மரணத்திற்கு வேண்டும் செபம்!

1. என் ஆண்டவரே! என் கண் இரண்டும் பஞ்சடைந்து கடைசி விசையாக உம் பாடுபட்ட சுரூபத்தை ஏறெடுத்துப் பார்க்கும்போது, எம் தயாபர யேசுவே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்.

2. என் ஆண்டவரே! என் காதிரண்டும் கேள்வியற்று கடைசி விசையாக உம் திருப்பெயரை என் காதினால் கேட்கும்போது,எம் தயாபர யேசுவே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்.

3. என் ஆண்டவரே! என் நாவானது சோர்ந்துபோய் கடைசி விசையாக உம்திருப்பெயரை என் நாவினால் உச்சரிக்கும்போது, எம் தயாபர யேசுவே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்.

4. என் ஆண்டவரே! என் கை இரண்டும் சோர்ந்துபோய் கடைசி விசையாக உம் பாடுபட்ட சுரூபத்தை நான் கையெடுத்துக் கும்பிடும் போது, எம் தயாபர யேசுவே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்.

5. என் ஆண்டவரே! என் ஆத்துமமானது என் சரீரத்தை விட்டுப் பிரிகிற அந்தக் கடைசியான நேரத்திலே, எம் தயாபர யேசுவே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்.

6. என் ஆண்டவரே! என் ஆத்துமமானது உம் திருச்சமுகத்திலே கணக்கு ஒப்பிக்க நிற்கும் அந்தப் பயங்கரமான நேரத்திலே, எம் தயாபர யேசுவே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்.

நாம் சாகும்போது சாவான பாவமில்லாமல் நல்ல மரணம் அடையும் படியாக, ஆண்டவரின் ஐந்து திருக்காயங்களைக் குறித்து ஒரு பரலோக மந்திரமும் ஓர் அருள்நிறைந்த மந்திரமும் வேண்டிக்கொள்ளுவோம்!

**நன்றி : வல்லமை மிகுந்த ஜெபங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள மேசி ...!

நான் இருக்கிறேன்; நீங்கள் இல்லை. பிரெஞ்சுத் தத்துவவாதி ஜீன் போல் சார்த்தரின் புகழ்பெற்ற, Being and Nothingness - 'இருத்தலும் இன்மையும்' நூற்பெயர், அர்த்தச் செறிவுடன் அடிக்கடி என் நினைவில் வருகிறது! நீங்கள் இல்லை; ஆனால், மனவெளியில் உங்களுடன் என் உரையாடல் தொடர்கிறது...

ஒரே ஊரைச் சேர்ந்தவர்களாயினும், உங்களை எனக்கு நீண்ட காலமாய்த் தெரியாது. தபாற் திணைக்களப் பணி காரணமாய் கொழும்பு, பசறை, பேராதனை, கண்டி, மீண்டும் கொழும்பு என வாழ்ந்ததில் ஊரில் பலவற்றை அறியாதிருந்தேன்! விருப்பத் தேர்விலான பணி ஓய்வின்பின் ஊரில் இருந்தபோது, 1989 இல், 'திசை' வார வெளியீட்டில், கலாசாரப் பக்கங்களுக்குப் பொறுப்பாக - துணை ஆசிரியராகப் பணியாற்றினேன். 'திசை அலுவலகம்' உங்கள் வீட்டுக்கு அண்மையில், மார்ட்டின் வீதி - பிரதான வீதி மூலையில் இருந்தது. காலையில் பணிக்குவந்த சில நாள்களில், அலுவலகத்துக்கு எதிர்ப் புறம், கையில் கோவைகளுடனும் சில புத்தகங்களுடனும் ஓர் இளம்பெண், நகரத்துக்குச் செல்லும் பேருந்துக்காகக் காத்திருப்பதைக் கண்டிருக்கிறேன். எப்படியென்று நினைவில்லை ; அந்தப் பெண் எமது எசெக்கியேல் ஆசிரியரின் மூத்த மகளென்றும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் செல்பவ ரென்றும் தெரியவந்தது. ஆயினும், பிறகும் உங்களை நான் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை.

திருமணம் செய்யாது தனியனாக - இந்தியாவில் புதிய இடங்களுக்குப் பயணம்செய்து சுதந்திரமாக வாழும் மனநிலையில் இருந்தேன்; குடும்பத்தில் அம்மாவுக்கும் சகோதரிகளுக்கும் நான் திருமணம் செய்யாததில் மனக்குறை இருந்தது. 1992 இன் இறுதிப் பகுதியில் ஒருநாள், சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் முன்னர் என்னுடன் படித்த மரியாம்பிள்ளை, எசெக்கியேல் மாஸ்ரரின் மகள் - ரீச்சர் என உங்களைக் குறிப்பிட்டு, ஏன் அவரைக் கலியாணம் முடிக்கக்கூடாது என்று கேட்டார். வீட்டில் இதனைச் சொன்னபோது உங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு அறிந்த எனது இரண்டாவது தங்கை, மிகுந்த மகிழ்ச்சியுடன், கட்டாயம் நான் இந்தக் கலியாணத்தைச் செய்ய வேண்டுமென மீண்டும் மீண்டும் வற்புறுத்தினாள்; அம்மாவும் விரும்புவதை உணரமுடிந்தது. அம்மாவின் மனக் கவலையைப் போக்கவேண்டுமென்ற உணர்வும் தோன்றியது. என்றாலும், "யோசிக்க வேணும்; ஒரு மாதத்துக்குப் பிறகு முடிவைச் சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டேன்.

உங்கள் அப்பா எங்கள் பாடசாலையில் கற்பித்தபோது, அவர்மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்தோம். 35 நிமிடப் பாடவேளையில் முதல் 5 நிமிடங்கள் பாடத்தைப் படிப்பிக்காது, நாங்கள் எவ்வாறு நல்ல மனிதர்களாக வாழவேண்டும் ; சமூக அக்கறையுடன் செயற்பட்டு மற்றவர்கள் மதிக்கும் வண்ணம் முன்னேற வேண்டுமென்று, ஒவ்வொருநாளும் போதிப்பார். எண் கணித பாடத்தை விசேடமாகக் கற்பிக்கும் அவர், இலகுவான வழிமுறைகளில், சுருக்கமான செய்முறைகளையும் காட்டித் தந்தார்; 1961 இல், சாதாரண தரப் பரீட்சையில் (ஓ/எல்) நான் விசேட (D) சித்தியைப் பெற்றேன். பாடசாலையை விட்ட பிறகு சும்மா வீட்டில் நின்றேன். ஒருநாள் வாசிகசாலையில் என்னைக் கண்டவர், என்ன செய்கிறீர் எனக் கேட்டு, ஏ. எல். படிக்கலாமெனக் கூறி, சிக்மறிங்கம் மாஸ்ரர்மூலம் ஸ்ரான்லி கல்லூரியில் சேர்த்தும்விட்டார். அவர் மீதான நன்றி உணர்வு என்னில் இருந்தது. அதனால் சாதகமான மனநிலையில், உங்கள் கல்லூரி முடியும் நேரத்தில், பாங்ஷால் வீதியில் - இரண்டு நாள்கள் உங்களை அவதானித்தேன். உங்கள் "பெரியன்ரி" மரியாம்பிள்ளையுடன் இத்திருமணம்பற்றிக் கதைத்துள்ளார். என்னுடன் சிறிது கதைக்கவேண்டுமென நீங்கள் சொன்னதில், உங்கள் உறவினர் நெல்சனின் வீட்டிற்கு நான் வந்தேன். அன்றுதான் முதன்முதலாக உங்களை நேரில் சந்திக்கிறேன். நீங்கள் சிலவற்றை என்னிடம் விசாரித்தீர்கள்; உங்கள் வெளிப்படைத்தன்மை எனக்குப் பிடித்திருந்தது; அதனைக் குறிப்பிட்டேன். பிறகு இருவீட்டாரின் முடிவின்படி 1992 ஐப்பசி 21 இல், எளிமையாக நமது திருமணம் நடைபெற்றது. நீண்டகாலமாக சமயம், கோவில் என்பவற்றில் ஈடுபாடு இல்லாதவன் நான். நீங்கள் என் நம்பிக்கையில் தலையிடவில்லை; உங்கள் சமய நம்பிக்கையில் நானும் தலை யிடவில்லை! ஆயினும், இளமையில் உருவான கிறிஸ்தவ விழுமியங்கள் பற்றிய பற்றீடுபாடு என்னில் இன்றும் உள்ளது என்பதைப் பின்னர் நீங்களும் அறிவீர்கள். மகிழ்ச்சியான வாழ்க்கையை அனுபவித்தோம். போர்மேகம் கவிந்த சூழலில், மற்றையோரைப் போலவே எமக்கும் கஷ்டங்கள் பல. 1995 பெரும் இடப்பெயர்வில் கிராஞ்சி சென்றோம்; அந்தவாழ்க்கையில் நீங்கள் சிரமப்பட்டதில் எனக்குக் கவலைதான்.

மாணவர்களாலும் பெற்றோராலும் விரும்பப்பட்ட ஓர் ஆசிரியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் என்பதை அனுபவவாயிலாக அறிந்துள்ளேன்; நீங்களும் உங்கள் தந்தையைப்போல்தான் என எண்ணினேன். வங்கி, அரசாங்க அலுவலகங்கள், பொது இடங்களுக்குச் செல்கையில் பலர் பணிவுடன் "மிஸ்" எனக் குறிப்பிட்டு, உங்களுக்கு மரியாதை செய்ததைப் பல தடவைகள் கண்டுள்ளேன்; அதனால், "மேசி, நீங்கள் எலெக்ஷன் கேட்கலாம்" என உங்களைக் கேலி செய்துமுள்ளேன்.

உங்களின் இரக்க சுபாவத்தினால் பலரின் துன்ப துயரத்தின்போது அவர்களிடம் சென்று, அவர்களின் உணர்வுகளைப் பகிர்ந்து ஆறுதல் படுத்தியுள்ளீர்கள். தேவைகளுள்ள வசதி குறைந்தோருக்குப் பணம், உடைகள் என உதவியுள்ளீர்கள். கல்லூரி விடுதியில் தங்கியுள்ள வன்னியைச் சேர்ந்த - பெற்றோரை இழந்த வறிய மாணவர் சிலருக்கு, வீட்டில் தயாரிக்கும் விசேட உணவுகளைக் கொண்டுபோய்க் கொடுத்திருக்கிறீர்கள் ; ஞாயிற்றுக்கிழமைகளில் சிலரை வீட்டுக்கு அழைத்தும் உணவளித்துள்ளீர்கள். கடையில் பிஸ்கற் முதலியவற்றை நாம் வாங்கும்போது, அவர்களுக்குமென, மேலதிகமாக வாங்குவீர்கள். "பாவம்... அவங்களுக்கு இதெல்லாம் எங்க கிடைக்கப்போகுது" என்று அனுதாபப்படுவீர்கள்.

எனது பெற்றோரும், சகோதரிகளும் உங்கள்மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்தனர்; நீங்களும் அவர்களுடனும் எனது உறவினருடனும் எளிமையாகப் பழகி, உதவிகளும் புரிந்து உங்கள் அன்பை வெளிக்காட்டினீர்கள்.

சிறுவயதுமுதலே வாசிப்பில் ஈடுபாடுள்ளவன் நான்; குருநகரிலுள்ள நான்கு வாசிகசாலைகள் எங்களை வளர்த்தன. அரசாங்க சேவையில் 1967 இல் இணைந்த பின், மாதந்தோறும் புத்தகங்கள் வாங்குவேன்; எனது மகிழ்ச்சிக்கான ஒரே செலவு அதுதான்! எனது சேகரிப்பு நான்காயிரத்துக்கும் மேல்! திருமணம் புரிந்தபின் புத்தகக் கடைகளில் தேவையானவற்றைக் கண்டால், சிலவேளைகளில் ஏழாயிரம் எட்டாயிரம் ரூபாவுக்கும் வாங்கியுள்ளேன். காசு குறைவாயுள்ளபோது மற்றவற்றை எடுத்து வைத்துவிட்டு வீட்டுக்கு வந்து உங்களிடம் சொன்னால், "காசு இருக்கா?" எனக் கேட்டுத் தேவைப்படும் தொகையைத் தருவீர்கள். நீங்கள் விஞ்ஞான ஆசிரியை என்பதால், தமிழில் வந்துள்ள - பொது வாசிப்பிற்குரிய - விஞ்ஞான நூல்கள் பலவற்றை உங்களுக்காக வாங்கிச் சேகரித்துமுள்ளேன். நீங்கள் ஓய்வுள்ள வேளைகளில் பலவற்றை வாசித்து, மாணவர்களும் பயன்பெறச் செய்துள்ளீர்கள். இடையிடையே மாணவருக்குப் பரீட்சை வைத்து, கூடிய புள்ளிகள் பெறும் மாணவர் இருவருக்குப் புத்தகப் பரிசு தருவதாகச் சொல்லி ஊக்கப்படுத்தியுள்ளீர்கள். பாரதியார் கவிதைகள், திருக்குறள், அறிவியல் கேள்வி பதில்கள், அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகள் என வந்துள்ள, நல்ல மலிவுப் பதிப்பு நூல்களை நான் தேடிவாங்கி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு உதவியுள்ளேன். அந்த நூல்களைக்காணும் ஏனைய மாணவர்கள் தங்களுக்கும் வாங்கித் தரும்படி பணம் தந்து உங்களை வற்புறுத்தும்போது, இருபது முப்பதெனப் புத்தகங்களை என்னை வாங்கச் செய்து உதவியுள்ளீர்கள். 'அறிவிசை' என்னும் தரமான அறிவியல் இதழின் 75 வரையிலான பிரதிகளை, இரண்டு மாதங்களுக்கொருமுறை மாணவர் மத்தியில் விநியோகித்து உதவியதை, அதனை வெளியிட்ட நண்பர்கள் இன்னும் நன்றியுடன் நினைவு கூர்கின்றனர்!

திருமணத்துக்கு முன் நான் எழுதிய இரண்டு புத்தகங்களை வெளியிட்டுள்ளேன்; ஆனால், திருமணத்தின்பின் எட்டுப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் இரண்டைத் தவிர ஏனைய ஆறும் என்னால் வெளியிடப் பட்டவை. அந்த ஆறு புத்தகங்களும் வெளிவந்ததில் உங்களின் பங்களிப்பும் இருக்கிறது. தவிர, அவற்றின் வெளியீட்டு நிகழ்வுகளில் வருகை தருவோரை உபசரிப்பதில், உங்களின் தோழியர், எனது சகோதரிகள் ஆகியோரை இணைத்துச் சிறப்பாகச் செயற்பட்டீர்கள். அச்செயற்பாட்டில் ஈடுபடுவதால் நிகழ்வின் உரைகளை முறையாகச் செவிமடுக்க முடிவதில்லை என்ற மனக்குறையும், உங்களுக்கு இருந்தது ; பொறுப்பை மற்றையோரிடம் கொடுத்துவிட்டு சபையில் அமர்ந்து, நிகழ்ச்சியில் பங்கெடுங்கள் என்று நான் கூறியதுண்டு. ஆனால் நீங்களோ, "நமது அழைப்பை ஏற்று வருபவர்களை நாம் திருப்தியாக உபசரிக்க வேண்டும்" எனக்கூறி, அதிலேயே ஈடுபடுவீர்கள்!

இலண்டனிலுள்ள நீண்டகால நண்பர் பத்மநாப ஐயரின் ஒழுங்கமைப்பினால், 2001 இல், நான்கு மாதங்களுக்கான பல்தடவை நுழைவு விசா (Multiple Entry Visa) பெற்று இலண்டன் சென்றேன். அங்கிருந்து பிரான்ஸ், யேர்மனி, நோர்வே, நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கும் சென்று வந்தேன். ஊர் திரும்பிய பின்னர் பயணம் பற்றிய ஏக்கம் உங்களிடம் இருந்ததை உணர்ந்தேன். எனவே அடுத்த ஆண்டில், வேளாங்கண்ணி முதலிய புனித ஸ்தலங்களுக்கும் ஏனைய இடங்களுக்குமாக தமிழகப் பயணம் செல்லலாமென உங்களைத் தூண்டி, ஒரு மாதப் பயணம் சென்றோம். திருவனந்தபுரம் வழியாக நாகர்கோவில் சென்று, புனிதர் தேவசகாயம்பிள்ளையின் நினைவிடமான காற்றாடிமலை, வேளாங்கண்ணி, பாண்டிச்சேரி, திருநெல்வேலி, திருச்சி, மதுரை, தஞ்சாவூர், சென்னை, மாமல்லபுரம் எனப் பல இடங்களுக்கும் சென்றோம். பல இடங்களில் சுந்தர ராமசாமி, ரவிக்குமார் முதலிய முக்கிய எழுத்தாளரின் வீடுகளில் தங்கினோம் ; இன்னும் பல எழுத்தாளர்களையும் சந்தித்தோம். இலங்கையைச் சேர்ந்த உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் தங்கி முக்கியமான இடங்களைச் சுற்றிப் பார்த்தோம் ; நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தீர்கள்; அவ்வாறே எனது உறவினரின் உதவியால், 2016 இல் கனடாவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மாதங்களைக் கழித்தோம். 2018 இல், ஜெருசலேம் புனித யாத்திரையில் சென்று வந்தீர்கள். அதே ஆண்டு நடுப்பகுதியில் பிரான்ஸ், யேர்மனி, சுவிற்சர் லாந்து ஆகிய நாடுகளுக்குச் செல்லும் நமது பயண ஒழுங்குகள், அக்காலத்தில் உங்களுக்கு வந்த இதய நோயினால் தடைப்பட்டன. அடுத்து 2020 இல், அவுஸ்திரேலியாவில் மூன்று கிழமைகளையும், சிங்கப்பூரில் ஒரு கிழமையையும் பயன்மிக்கதாக மகிழ்ச்சியுடன் கழித்தோம். இப்பயணங்கள் புதிய அனுபவங் களை எமக்குத் தந்தன.

எமது குடும்ப வாழ்வில் இடையிடையே சில நெருடல்களும் ஏற்பட்டதுண்டு; ஆனால், யதார்த்த வாழ்வில் அவை இயல்பானவைதான். ஆதார மாகப் பரஸ்பர அன்பும் அக்கறையும் எம்மிடையே இருந்ததால், அவற்றைக் கடந்துவந்தோம். ஆனால், தொடர்ச்சியாக - நீண்டகாலமாக உங்களுக்கு மனக்கவலையைத் தந்த பிறிதொரு நிலைமையும் இருந்தது ; அதனால் பலதடவைகள் கண்கலங்கியும் இருக்கிறீர்கள். ஓம், உங்கள் குடும்ப உறுப்பினர் ஒருவர், வன்மங்கலந்த 'பிறழ் மனநிலை' யில் தொடர்ந்து செய்துவந்த 'சின்னத் தனமான செயல்களால்தான்', அவ்வாறு கவலையடைந்தீர்கள்; கோபமடையும் என்னை அமைதியாக இருக்கும்படியும் ஆற்றுப்படுத்தினீர்கள். அவருடன் தொடர்புள்ள இங்குள்ள உறவினர் அவரைக் கண்டித்துத் திருத்தவில்லை என்ற ஆதங்கமும், உங்களிடம் இருந்தது. அதே 'நபர்', திடீரென உங்கள் மரண வீட்டில் 'அதீத உறவுரிமை' காட்டி ஆடிய 'நாடகம்', பைபிளில் வரும் 'வெள்ளையடிக்கபபட்ட கல்லறைகள்' என்ற சொல்லை நினைவூட்டி எரிச்சலை யும் கோபத்தையும் எழுப்பியபோதிலும், மரணவீட்டின் கௌரவத்துக்காக அமைதி காத்தேன்.

உங்கள் வாழ்வின் இறுதிக் கட்டத்தில், வைரஸ் காய்ச்சலின் பின் பலவீனமடைந்தீர்கள். தோடர்ந்து வயிற்றின் இடது கீழ்ப்புறத்தில் நோவினால் அவஸ்தைப்பட்டீர்கள். மூன்று வாரப் பரிசோதனைகளின் பின்பே, சிறுநீரகத்தில் கட்டி உள்ளதெனக் கண்டுபிடிக்கப்பட்டு, சத்திரசிகிச்சைக்கு நாள் குறிப்பிடப் பட்டது. இந்நிலைமையில் அச்சமடைந்திருந்தீர்கள். பராமரிப்பில் உதவிய சகோதரியும், யாழினியும், நானும் உங்கள் அச்சத்தை நீக்கும் முயற்சியில் மாறிமாறி ஈடுபட்டதில், சத்திரசிகிச்சையன்று உறுதியான மனநிலையில் இருந்தீர்கள். ஆறு மணிநேர சத்திரசிகிச்சையின் பின், திருப்தியான சத்திர சிகிச்சை என மருத்துவர்கள் தெரிவித்தனர். அன்றும் மறுநாளும் அவசர சிகிச்சைப் பிரிவில் (EU) நீங்கள் நன்றாகவே இருந்தீர்கள். ஆனால், அதேநாள் இரவு பத்துமணிபோல், பராமரிப்புச் சகோதரியின் கையை இறுக்கிப் பிடித்தபடி, "போகவேண்டாம் சிஸ்ரர்... எனக்குப் பயமா இருக்குது..." என்று வலி யுறுத்தினீர்கள். "பயப்பிட வேண்டாம் அம்மா. நாங்கள் உங்களுக்காகச் செபிக்கிறோம்... நீங்களும் செபம் சொல்லி உறுதியாக இருங்க... எல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லபடி நடக்கும்." என்று அவர் சொல்லிச் சென்றார். அடுத்த நாள் காலை, அவருக்குக் "குட் மோணிங்" சொன்னீர்கள். உங்களை அவர் சுத்தப்படுத்தி விசாரித்தபோது, நல்லாயிருப்பதாகக் கூறினீர்கள். "நோகுதா?" என்று கேட்டபோது, "மருந்து போடுவதால் நோகயில்ல" என்றீர்கள். ஒரு மணி நேரத்தின் பின்னர் பால் மாவைப் பருக்கியபோது, பச்சை நிறமாகச் சத்தி எடுத்தீர்கள். பராமரிப்புச் சகோதரியை ஒருவிதமாகப் பார்த்தீர்களாம். அவர், "அம்மா ... அம்மா ..." என அழைத்தபோதும் நீங்கள் பதிலேதும் கூறவில்லையாம். அந்தவேளை ... சகோதரியின் கை உங்களைத் தாங்கியிருக்க, காலை 7.10 மணிக்கு உங்களின் உயிர் திடீரெனப் பிரிந்திருக்கிறது! அமைதியான நல்மரணம். மேசி...! நீங்கள் "இன்மை"க்குள் சென்றுவிட்டீர்கள் ; நாங்கள் "இருக்கிறோம்." ஆனால் இந்த "இருத்தல்", உங்களை இழந்த துயரில் நனைந்து ஊறியிருக்கிறது!

00

சத்திரசிகிச்சை செய்த மருத்துவரில் ஒருவர், 'எதிர்பாராத மரண'மெனக் கவலைப்பட்டார் ; சிறிதான இதயத் தாக்குதல் அல்லது 'புளொக்' ஏற்பட்டிருக்கலாமென்றார். நீங்கள் மரணமடைந்த நான்கு நாள்களின் பின்னர், கனடாவிலிருந்து கவிஞர் சேரன் கதைத்தார். அவரை உங்களுக்கும் தெரியும். கனடாவில் நாம் நின்றவேளை ஒருநாள், தனது வீட்டிற்கு அழைத்து, நமக்கு இரவு விருந்து அளித்தார். உங்கள் நோய், மரணம் பற்றி விபரம் கேட்டபோது சொன்னேன். உங்களைப்போலவே அவருக்கும் இதய வியாதிக்காக இரண்டு 'ஸ்ரென்ற்' (stent) வைக்கப்பட்டுள்ளன. தனது அனுபவம், இதுபற்றித் தான் திரட்டிய அறிவின்படி - துக்கம், மிகையான மகிழ்ச்சி, பயம் என்பவற்றில் ஏதுமொரு காரணியால் மன அழுத்தம் (stress) ஏற்படும்போது, மாரடைப்புக்குச் சாத்தியமுண்டு என்று சொன்னார். மருத்துவர் கூறியதையும் இணைத்துப் பார்க்கையில் உங்கள் பயம்தான் மரணத்துக்குக் காரணமாக இருந்துள்ளது! ஆரம்பத்தில் பயந்து பிறகு தேறித் திடமான பின்னர், சத்திர சிகிச்சைக்குப் பிறகு நல்ல நிலையில் இருந்தும், மறுபடியும் உங்கள் மனதுக்குள் பயம் உருவாகியுள்ளது. அவசர சிகிச்சைப் பிரிவின் வித்தியாசமான கருவிகளும் தனிமைச் சூழலும் பயத்தைத் தூண்டியிருக்கலாம்; சாதாரண விடுதியில் தங்க விடப்பட்டிருந்தால், பயமற்று, சாதாரண மனநிலையில் நீங்கள் இருந்திருக்கலாம் என்றவாறெல்லாம் மனம் அல்லாடுகிறது! என்றென்றைக்குமாக உங்களை இழந்துவிட்டோம்!; பேரியற்கை என்றும் மரணத்தின் மூலம் மனிதனைத் தோற்கடிக்கிறது! நம் வீட்டில் ஒருநாள் தங்கிய - உங்களுக்கும் பழக்கமான கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தின்,

"போகட்டும் ...

இன்று முதல் கசப்புகளை வாங்கிப் புசிக்கிறேன்." என்ற கவிதை வரிகளும் ஏனோ, நினைவுக்கு வருகின்றன!

- அ. யேசுராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கா : என் நினைவுகள்...!

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த ஆசிரியர்களான எசெக்கியேல், றெஜினா தம்பதிகளுக்கு மூத்த மகளாக எனது அக்கா பிறந்தார். தந்தையாரின் அளவுகடந்த அன்பிலும், தாயின் அரவணைப்பிலும், பேரன், பேர்த்தி மற்றும் மூன்று தாய்மாமன்மார்களின் பராமரிப்பிலும் பாசத்திலும், ஆனந்தமாக வளர்ந்தார். விதியின் விளையாட்டினால், பதினாறு வயதில் தாயை இழந்தார். அன்றிலிருந்து தனது வாழ்வில் சோகம் கவிந்ததாகப் பலமுறை என்னிடமும், பலரிடமும் கூறியிருக்கிறார். "தாயில்லாப் பிள்ளை வாயில்லாப் பிள்ளை" என்று சொல்வார்கள். அதேபோல் தந்தையின் சொல்லுக்கு அமைய வாய்திறவாமல், அவர் பேசி முடித்த திருமணத்தைச் செய்தார். 1982 ஆம் ஆண்டு ஆனியில் நடந்த திருமணம், ஆறேமாதங்களில் முறிவடைய, அந்தச் சோகத்தில் தந்தையும் அதே வருடம் மார்கழியில் இறந்தார். அவர் இறக்கும் தறுவாயில் என்னிடம், "பிள்ளைக்கு நான் துரோகம் செய்துவிட்டேன். நீதான் அக்காவுக்கு எப்பவுமே துணையாயிருக்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். எனது தந்தை அக்காவை எப்போதும், "பிள்ளை" யென்றே அன்புடன் அழைப்பார். அன்றிலிருந்து எனது ஆசை அக்கா இறக்கும் வரை, நான் என் தந்தையின் சொல்லைக் காப்பாற்றிவிட்டேன் என்ற ஒரு நிறைவுதான், அக்காவின் பிரிவில் தவித்துக் கிடக்கும் எனக்குக் கொஞ்சம் ஆறுதலைத் தந்துகொண்டிருக்கிறது.

1992 ஆம் ஆண்டு, தபால் அதிபரும் எழுத்தாளருமான யேசுராசாவைத் திருமணம் செய்து, அவரின் பெற்றோர் - சகோதரங்களுடன் அன்பாக உறவாடி, நிம்மதியாக வாழ்ந்து வந்தார். கடைசி நாள்களில் - அக்கா இறக்கும்வரை அவருடன் சேர்ந்து வாழ்ந்து, கூடப்பிறந்த சகோதரி போல் உதவி செய்துவந்த யேசுராசாவின் இளைய சகோதரியான சகாயமலரிற்கு, என்றென்றும் நான் கடமைப்பட்டுள்ளேன். பல்லாயிரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைல்களுக்கு அப்பால் நான் வாழ்ந்துகொண்டிருந்தாலும், அக்கா எப்போதுமே எனது அருகில்தான் இருந்தார். வாரத்திற்கு ஓரிருமுறை பேசிக் கொள்ளும்போது, பல விதமான விடயங்களைப் பகிர்ந்துகொள்ளுவோம். நாட்டு அரசியல், ஊர் நிலைமைகளைப் பற்றி நிறையப் பேசுவோம். இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை விடுமுறையில் ஊருக்கு வரும்போது, கொளுத்தும் வெயிலிலும் நடந்தபடியே கதைத்துக் கொண்டு யாழ்நகரைச் சுற்றி வருவோம். எனது பிள்ளைகளைத் தன் சொந்தப் பிள்ளைகளைப் போல் பராமரித்து, உணவூட்டி மகிழ்வார். "பெரியம்மா... பெரியம்மா..." என்று வாயார, என் பிள்ளைகள் அவரை அன்புடன் அழைப்பார்கள். எனது கணவரையும் தனது உடன்பிறப்புப் போலவே கவனித்துக்கொள்ளுவார். வாழ்க்கையில் தனக்கு ஏற்பட்ட அவமானம், வேதனைகளையெல்லாம் புறந்தள்ளிவிட்டு, தனது ஆசிரியர் பணியை 31 வருடங்கள் திறம்படச் செய்து முடித்தார். சமூகத்தினால் துன்புற்ற பெண்கள், எப்படித் தைரியமாகத் தம் சொந்தக்காலில் நின்று வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர்தான், என் அக்கா!

பாசமுள்ள என் அக்கா! கடந்த சித்திரையில் நீ நோய்வாய்ப் பட்டிருக்கிறாய் என்று கேள்விப்பட்டு, எனது கணவருடன் ஓடோடி வந்தேன்; உனக்கு என்னென்ன மருத்துவ சிகிச்சைகள் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் ஒழுங்குசெய்து முடித்துவிட்டே, இங்கு திரும்பி வந்தேன். சித்திரை 9 ஆம் திகதி உனது பிறந்தநாள். உனக்குக் 'கேக்' செய்து தரவேண்டும் என்று, இங்கிருந்து தேவையான பொருள்களையெல்லாம் கொண்டுவந்து, 'கேக்' செய்து தந்தேன். சிறிது உண்டு மகிழ்ந்தாய். ஆனால், இதுதான் உனது கடைசிப் பிறந்தநாள் என்று, நான் கனவிலும் நினைக்கவில்லை! "எனது தங்கச்சி மேளின் தைரியமானவள்" என்று, எல்லோருக்கும் சொல்லிப் பெருமைப்படுவாய். ஆனால் இப்போ, உன் பிரிவால் நான் என்னையே இழந்து நிற்கிறேன். காலம்தான் என் கவலையை ஆற்றவேண்டும். பிறர்சிநேகத்துடனும் தன்னம்பிக்கையுடனும் வாழ்ந்த உன்னை எனக்கு மூத்த சகோதரியாகப் படைத்த அந்த இறைவனுக்கு, நன்றி! இன்னொரு பிறவி எனக்கு இருந்தால், மீண்டும் உன் "தங்கச்சி"யாக ஈழத் தமிழ்த் தாய்மண்ணில் பிறந்து, உன்னோடு அங்கே மகிழ்ச்சியாகச் சுற்றித் திரியவே ஆசைப் படுகிறேன் அக்கா...!

- உன் பிரிவால் வாடும் அன்புத் தங்கை.
திருமதி மேளின் யேசுரட்ணம்
(சிட்னி. அவுஸ்திரேலியா).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Periyamma!

Having spent the past few weeks reflecting on my Periyamma, I was truly blessed to have her in my life. I have many wonderful memories of us together. She was always one of the important women in my life, and on reflection its more obvious to me now, what impact she had on my life.

I always loved travelling to Jaffna, now I realise the reason I loved it so much was because I got to spend time with Periyamma. Having two Amma's looking after me for those few weeks were great. I enjoyed the small things we did like going to mass together, or her taking me to the shops. I used to tell her about all the new things I had, and she would listen and enjoy the conversation. We did many trips within Sri Lanka and when she was there it made more enjoyable. Some of the saddest days of my life were when we left Jaffna and I would see Periyamma waving us goodbye from her gate, and I wouldn't know when I would see her next.

I used to always ask Periyamma when she would come to Australia, and she always told me when I got married, she would come for the wedding. And when my wedding came around, she stuck to her promise and made the trip out here. It made the reception and those few weeks more special having both my Amma's next to me. I was happy she was able to come and see the life her sons lived here in Australia.

I was looking forward to Periyamma meeting her grandson, however it was not meant to be. Although I'm glad she got to see him over the phone. I know I will be telling my kids about how great Periyamma was to me, and the impact she had on my life.

It is tough to accept that I won't be able to talk to my Periyamma again, however, I know she's in a better place and I pray that she rests in peace.

**From: Nirrujan Jesuratnam**
(Sydney, Australia)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Periyamma,

I will never forget the memories we had together and the way you treated me like one of your own children. You had such a warm and caring soul and every time we were together, we were just happy. No matter how many obstacles and tough times you went through in life your heart remained solid gold and you came out of the other side stronger. This has taught me many personal lessons in life that I use such as perseverance, resilience and having a positive attitude.

I will really miss you but there are no goodbyes. Wherever you'll be, you'll be in my heart.

Rest in peace sweet Periyamma.

**From: Abhayan Jesuratnam**
(Sydney, Australia).

---

**கீதாஞ்சலி – 84** **மகாகவி தாகூர்**

பிரிவின் துயரமே உலகத்தில் பரவிப் பாய்கிறது; இதுவே எல்லையற்ற ஆகாசத்தில் எண்ணற்ற உருவங்களைத் தோற்றுவிக்கிறது.

இந்தப் பிரிவின் துக்கமே, இரவெல்லாம் நட்சத்திரங்களிலிருந்தும் மௌனமாக உற்று நோக்குகிறது ; இதுவே ஆடிமாதத்து மழையிருளில் இலைகளின் சலசலப்பின் நடுவே, இனிய கீதமாய் பரிணமிக்கிறது.

பொங்கிப் பரவும் இந்த வேதனையே, பிரேமைகளாகவும் ஆசைகளாகவும் கனிந்து, மானுடர்தம் வீடுகளில் இன்ப துன்பங்களாக மாறிவிடுகிறது ; இதுவே என் கவிதை உள்ளத்திலிருந்து பாடல்களாக உருகிப் பெருக்கெடுத்து ஓடுகின்றது.

**- ஆங்கிலம் வழி தமிழில் : வி ஆர். எம். செட்டியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோழியே...!

கண்டது கனவாக மாறாதா
என்று என்மனம் துடிக்கிறது;
நீ அறிவாய் நான் படும் துயர்.

உன் மலர்ந்த முகத்திற்கு
மலர் போன்ற பெயர் உடையாள் -
உன் அழகு காண மலர்களுக்கு
நிதம் போட்டி,
புதுவித மலர் நீ என்று!

மலர் வாடும் என்பர்;
இன்று உணர்கிறேன்.

தோழியே!
உன்னோடு நான் கடந்த
நேரங்கள் எப்போது இனி வரும் ?
வராத முடிவிடம் நீ சென்றதேனோ!

மூன்று தசாப்தமான
உன் ஆசிரிய சேவைக்கு,
முற்றுப்புள்ளி வைத்ததேனோ;
அரைப்புள்ளி போட்டுத் தொடராதா
உன் சேவை!

எழுத்தாளனின் எழுத்தாணி நீ -
கருணைமகள் தாயின்
உயிர்த் தோழி நீ!

போகும் வழியிலும் எனை
வருடிச் சென்றாய் ;
உண்மையென்றால் நம்பாது
இவ்வுலகு!

உன் நினைவுகளுடனும்
உன் பிரிவில் துயருறும்
உன் உறவுகளுடனும்,
உன் உறவான தோழியும்...!

- திருமதி கிறிஸ்ரின் ராமகிரிஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தப் பயத்தையும் வெற்றிகொண்டிருந்தால்...!

எசெக்கியேல் மாஸ்ரர், கற்பித்தலுக்கு அப்பால் மாணவர்களின் வழிகாட்டியாக விளங்கிய மதிப்புமிக்க ஆசான். அவரின் செல்லப் பிள்ளையான நீங்கள் தாய், தந்தை வழிநின்று ஆசிரியத் தொழிலினைத் தேர்ந்து, அதன் மகத்துவம் உணர்ந்து, மாணவர் பலரின் பாதையைச் செவ்வைப்படுத்தியுள்ளீர்கள்.

மாணவர்கள்மீது தனிக்கவனம் செலுத்தி, அவர்களின் பின்னடைவுகளுக்கான காரணத்தை ஆய்ந்து, அவர்களின் மனச்சுமைகளில் பங்கெடுத்து, இரகசியமும் பேணும் உங்களின் தனிப்பண்புகள், ஆசிரியர்கள் கைக்கொள்ளவேண்டிய பண்புகள். "இதை எப்படிப் புரியும்படி விளங்கப்படுத்துவது?" என யோசித்துக்கொண்டிருந்த ஒருநாள், உங்களின் தேடல் எனக்குப் புரிந்தது; விஞ்ஞானம் கற்பிப்பது அவ்வளவு இலகுவான வேலையல்ல என்பதும் விளங்கியது.

உங்களின் அர்ப்பணிப்பான பணி பலரின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது. "எனது மாணவர்கள்" என்று பெருமிதம் அடையும் தருணங்களும், அவர்கள்மீது நீங்கள் கொண்ட நம்பிக்கையும், உங்களின் இறுதித் தருணம்வரை நான் கண்டேன்.

உங்களுடன் நடந்துசெல்வது என்பது சற்றே கடினமான விடயம் தான். "ரீச்சர்" என்று விளித்து, தம் பிள்ளைகளின் நிலை அறியும் பெற்றோர்களையும், ஓய்வுபெற்ற பின்பும், "நீங்கள் படிப்பிக்கமாட்டீர்களா?" என ஆதங்கப்படும் பெற்றோரையும் கடந்து செல்ல வேண்டும்!

உறவுகளுக்கு உங்கள் வீடு, ஒன்றுகூடும் இடம். உரிமையுடன் உங்கள் வீட்டில் வலம்வரும் அவர்களுடன் மகிழ்வுறும் நண்பி நீங்கள். உங்கள் சிற்றுண்டித் தயாரிப்புகள், சரியான விகிதங்களில் கலக்கும் உள்ளீடுகள் தரும் சுவையோ அருமை! அங்கேயும் நீங்கள் ஒரு விஞ்ஞான ஆசிரியை என்பதை உணர்த்தி நிற்பீர்கள்.

இலக்கியத்துறை சார்ந்த ஒருவரின் வாழ்க்கைத் துணையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் புதிய பரிமாணம் ஆரம்பித்தது. அதன் கனதி உணர்ந்து பல விட்டுக்கொடுப்புகளுடன், தொந்தரவின்றி உங்கள் பயணம் இனிதே நடந்தது. உங்கள் துணையின் புத்தக வெளியீடுகளிலும், மேடைப் பேச்சு களிலும் உங்கள் பரவசத்தை வெளிப்படையாகவே காணலாம். ஓய்வு பெற்றபின் நீங்கள் இணைந்து இரசிக்கும் சினிமாப்படங்கள், உங்கள் துணைக்கும் நீங்கள் தோழியாக மாறிவிட்டீர்கள் என்பதனை உணர்த்தின!

உங்களின் திருமணத்தால் உங்களுக்கு அமைந்த உறவுகளின் அரவணைப்பு, எங்களைச் சற்றே பொறாமைகொள்ள வைத்தது என்பதே உண்மை.

இறுதிவரை உங்களில் காணப்பட்ட அப்பாவித்தனம், நேர்மை, எளியவாழ்வு, கடவுள் நம்பிக்கை என்றும் மறக்கமுடியாத பண்புகள். பாரபட்சமின்றிப் பழகும் உங்களின் குணத்தால், வீட்டிற்குள் தயக்க மின்றி வந்து போவோர் பலராவர்.

உங்களின் இறுதிப் பிறந்தநாள் நிகழ்வு, உங்கள் சகோதரியுடன் இனிதே கழிந்தது ; இறுதிப்பயணம் தொடங்கியதை அறியாது மகிழ்ந் திருந்தோம். சத்திரசிகிச்சையினை நீங்கள் பயமின்றி எதிர்கொள்ள நான் வந்து உங்களுடன் கதைக்கும்பொழுதும், நாட்டு நடப்புப்பற்றியே கதைத்தீர்கள் ; "சனம் என்ன பாடு படப்போகுதோ!" என அங்கலாய்த் தீர்கள். சத்திரசிகிச்சையின் பின்பும் உங்களைச் சந்தித்தபோது, திடமாகவே இருந்தீர்கள். ஒரு கணமேனும் நீங்கள் எங்களை விட்டுப் பிரிவீர்கள் என யாரும் நினைக்கவில்லை; நீங்களும் நினைக்கவில்லை!

இளம்பருவத்தில் தாய் தந்தையை இழந்த நீங்கள்... அதனால் எழுந்த சோதனைகளை உறுதியுடன் வெற்றிகொண்ட நீங்கள்..., பெண்களுக்கு ஓர் உதாரணம்! அப்படியிருந்தும் ஏன் நோய்க்கும் மருந்து களுக்கும் பயம்கொண்டீர்கள்? அந்தப் பயத்தையும் வெற்றி கொண்டிருந் தால்..., நலமாக இருந்திருக்கும்!

ஆசிரிய சேவையின் திருப்தியுடன் நீங்கள் வாழ்ந்தீர்கள். ஆனால், ஓய்வுபெற்றவுடன் முடிந்துவிடவில்லை உங்களின் ஆசிரியப் பணி. என் பிள்ளைகளைக் கண்டதும் இயல்பாகவே எழும் கேள்விகள், ஆசிரியப் பணிக்கு முடிவில்லை என்றே உணர்த்தி நிற்கின்றன!

உங்களின் வாழ்க்கைத் துணைக்கும் உறவுகளுக்கும் உங்களின் இழப்பு, எதிர்பாராதது மட்டுமல்ல ; ஈடுசெய்ய முடியாததுமாகும்!

- யாழினி நெவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன் அஞ்சலிக்கிறோம்!

அமரர், ஆசிரியர் திருமதி மே. ஜெ. யேசுராசா அவர்களின் பிரிவு, கல்விச் சமூகத்திற்கு ஓர் இழப்பாகும். 1983 புரட்டாதி மாதம் 12ஆம் திகதி, விஞ்ஞான ஆசிரியராகத் தனது முதல் நியமனத்தைப் புனித பத்திரிசியார் கல்லூரியில் பெற்றுக்கொண்டு, 2014 சித்திரை 9 ஆம் திகதி ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வுபெறும் வரை, அர்ப்பணிப்பு மிக்க சிறந்த ஆசிரியப் பணியை எமது மாணவர் சமூகத்திற்கு ஆற்றியுள்ளார். அவருடைய பணியை மிகவும் நன்றி உணர்வோடு, பத்திரிசிய சமூகம் இந்த வேளையில் நினைத்துக்கொள்கிறது.

### மாணவர்களால் விரும்பப்பட்ட ஆசிரியர்

ஆசிரியர் திருமதி யேசுராசா, மாணவர்கள் எல்லோராலும் விரும்பப்படுகின்ற ஓர் ஆசிரியராகத் திகழ்ந்தார். கடினமான விஞ்ஞான பாடத்தை மாணவர்கள் இலகுவாகக் கிரகித்துக்கொள்ளக்கூடிய வகையில், எளிமையான முறையில் கற்பிப்பதில் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்தார். மெல்லக் கற்கும் மாணவர்கள் ஒவ்வொருவரிலும் தனிப்பட்ட கவனம் செலுத்துகின்ற ஓர் ஆசிரியராகத் திகழ்ந்தார். கல்வியில் பின் தங்கிய மாணவர்களைப் பற்றி தனிப்பட்டரீதியில் பகுதித் தலைவர் களோடு பேசி, அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி, கல்வியில் அவர்களை முன்னேற்றுவதில் அதிகமான ஈடுபாடுடைய வராகக் காணப்பட்டார். மாணவர்கள் எல்லோரையும் அன்போடும் பண்போடும் வழிநடத்துகின்ற, தலைசிறந்த ஓர் ஆசிரியராகத் தனது பணியை மாணவர்களுக்கு உவந்தளித்தார்.

### சக ஆசிரியர்களுடனான உறவு

ஆசிரியர் திருமதி யேசுராசா அவர்கள், சக ஆசிரியர்களோடு சிறப்பான தோழமையைப் பேணி வந்தார். எல்லா ஆசிரியர்களோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கொழும்பு - 2020



கன்னியாகுமரி - 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நயாகரா - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெருசலேம் 2018




கனடா - 2016



அவுஸ்திரேலியா - 2020



கிரஹாம் பெல் வீடு - கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிங்கப்பூர் - 2020







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்போடும் அன்போடும் உரையாடி, அவர்களுடைய வாழ்வின் இன்ப துன்பங்களிலே பங்கெடுக்கின்ற ஓர் ஆசிரியராகக் காணப்பட்டார். சக ஆசிரியர்கள் என்ன உதவி கேட்டாலும், இல்லை என்று சொல்லாது உதவிக்கரம் நீட்டுபவராக வாழ்ந்தார். ஆசிரியர்களுடன் தோழமையோடு பழகுவதற்கும் அப்பால், சவால்கள், பிரச்சினைகள் வருகின்றபோது தேவையான ஆலோசனைகளை வழங்கி, அவர்களுக்குக் கைகொடுப்ப வராக வாழ்ந்திருக்கிறார்.

ஆசிரியரின் தீடீர் மறைவு, எம் எல்லோரையும் ஆழ்ந்த வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது. ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னரும், கல்லூரிமீதான தனது ஈடுபாட்டை, கல்லூரியின் எல்லா விசேட நிகழ்வுகளிலும் கலந்துகொள்வதன்மூலம் வெளிகாட்டியுள்ளார். இறுதிக்காலத்தில் அவரின் நோயின் காரணமாகக் கல்லூரி நிகழ்வு களிலே கலந்துகொள்ள முடியாதுபோய் இருந்தாலும், கல்லூரியைப் பற்றித் தன்னுடைய சக ஓய்வுபெற்ற ஆசிரியர்கள்மூலமாகக் கேட்டு அறிந்துகொள்ளுவார். அன்னாரின் விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவில், அன்னாருடைய அர்ப்பணம் நிறைந்த ஆசிரியப் பணியை, பத்திரிசிய சமூகம் நன்றியோடு நினைத்து, இறைவனுக்கு நன்றி கூறுகின்றது. அவருடைய பிரிவினாலே துயருறும் அவருடைய அன்புக் கணவன், சகோதரர்கள், உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" என்ற, இறைமகன் கிறிஸ்துவின் உயிருள்ள வார்த்தையில் நம்பிக்கை கொண்டு, இறை சந்நிதானம் நாடி இருக்கும் எமது ஆசிரியரின் ஆன்மாவுக்கு, நித்திய பேரின்பத்தைப் பரிசாகக் கொடுக்கவேண்டும் என்று, இறைவனுடைய இரக்கத்தை இறைஞ்சி நிற்கின்றோம்.

நன்றி!

உப அதிபர்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலிகள்!

ஆசிரியை திருமதி மேசி ஜெயறோசா யேசுராசா, இடைநிலைப் பிரிவு மாணவர்களின் விஞ்ஞான பாட அடைவுமட்டத்தை முன்னேற்று வதற்குச் சிறந்த முறையில் பணியாற்றியவர். இவரின் பிரிவு எமக்கு மட்டுமல்ல, இவரது குடும்பத்தினருக்கும் பாரிய இழப்பாகும். சிரித்த முகத்துடன் புன்னகை இராணியாக பத்திரிசியார் கல்லூரியில் வலம்வந்த இவர், இன்று எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். ஆசிரியர்களின் நன்மை தீமையில் முழுமனதோடு இறுதிவரை நின்று பங்கெடுக்கும் இவர், புனித பத்திரிசியார் கல்லூரியில் சிறந்த மாணவர் பலரை உருவாக்கிய பெருமைக்குரியவர். எமக்குப் பிரச்சினைகள் எவையும் ஏற்படும்போது அவற்றைப் பகிர்ந்துகொண்டால், அவற்றை இரகசியமாகவே வைத்திருப்பார் ; இன்று அவை மண்ணோடு மண்ணாகப் போகப் போகின்றன.

இவருடைய மாணவர்கள் இவரைப் "புன்னகை அரசி"யென அன்பாக அழைத்துள்ளனர். இவருடைய பிரிவால் துயருறும் சக ஆசிரியர்கள், மாணவர்கள், குடும்பத்தினர், உறவினர் ஆகியோருக்கு ஆசிரியர் சங்கம் சார்பாக இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

செயலாளர்
(ஜெ. ஜெயகணேஷ்),
புனித பத்திரிசியார் கல்லூரி
ஆசிரியர் சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கல் உரை!

எமது அன்புக்கும் பண்புக்கும் உரிய ஆசிரியை காலஞ்சென்ற திருமதி மேசி ஜெயறோசா யேசுராசா அவர்களைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற முடிகின்றமையை, பெரிய பாக்கியமாகவும் கவலைக்குரிய நிகழ்வாகவும் கருதுகின்றேன்.

ஆசிரியத் தொழில் அதி உன்னதமான ஒரு தொழில் ஆகும். அந்த அதி உன்னதமான தொழிலிற்குத் தேவையான அதி உன்னதமான குணவியல்பு களைக் கொண்டிருந்தார். அத்துடன் இராஜ தோற்றத்தையும் அழகிய புன்னகையையும் கொண்டிருந்தார். மேலும், ஒவ்வொரு மாணவனினதும் தனிப் பட்ட ஆளுமை, சுயநல்லெண்ணம், சுயவிம்பம், தன்னம்பிக்கை மற்றும் மனித கௌரவம் ஆகியவற்றை மிகவும் மதித்த - மாணவர்களை நன்கு புரிந்துகொண்ட - ஓர் ஆசிரியையாக இருந்தார். அத்துடன், தேவையான அளவு கண்டிப்புடனே எப்பொழுதும் எவராலும் இலகுவாக அணுகப்படக்கூடிய நற்குணமுள்ள ஆசிரியராகவும் திகழ்ந்தார். அப்படிப்பட்ட குணங்களின் சேர்மானம் மிகவும் அரிதான ஒரு பொக்கிஷமாகும்.

எமது ஆசிரியை எப்போதும் கடமையுணர்வு மிக்கவராகவும், சந்தோஷம் மிக்கவராகவும், அன்பும் அக்கறையும் மிக்கவராகவும் மற்றவரை நன்கு மதிக்கத் தெரிந்தவராகவும் இருந்தார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், எங்களுக்கு இன்னொரு தாயாகவே திகழ்ந்தார். அப்படிப்பட்ட ஒருவரை எங்களுக்குத் தந்தமைக்காக, அவரது பெற்றோர்களான காலஞ்சென்ற ஆசிரியர்கள் எசெக்கியேல் மற்றும் றெஜினா ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

எமது ஆசிரியை எப்போதுமே எவரையும் தரம் குறைத்தோ தரம் தாழ்த்தியோ கதைத்ததில்லை. அதற்கும்மேலாக, இயற்கையாக உள்ள மற்றும் மனிதரால் உருவாக்கப்பட்ட வித்தியாசங்களின் அடிப்படையில் எவரையும் பாரபட்சத்திற்கு உட்படுத்தியதில்லை. மற்றவர்களைப் பற்றி அவர்களின் முதுகுக்குப் பின்னால் எதையும் கதைப்பவரும் இல்லை. தனது மேலதிகாரிகள், சக ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவருடனும் மிகவும் அன்பான, நட்பான, மதிப்பான உறவு முறையைப் பேணிவந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய நற்குணங்களிற்கு மேலதிகமாக அவரது இனிய புன்னகை 'கேக்'கிற்கு 'ஐசிங்' போட்டது போல் இருந்தது.

எமது ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரிடமிருந்து நிறைய மனிதப் பண்புகள் மற்றும் தலைமைத்துவப் பண்புகளைக் கற்கிறோம். நான் இவரில், இந்தப் பண்புகள் யாவும் மிகச்சிறந்த கலவையாக இருப்பதை அவதானிக் கின்றேன். அவர் தனது வகுப்பறையை மிக நேர்த்தியாகக் கட்டுப்பாட்டில் வைத்திருந்து, மாணவர்களின் பிரச்சினைகளை மிகவும் ராஜதந்திரமுறையில் கையாளுவார். அதனால், பகுதித் தலைவர் அருட்தந்தைக்கோ அதிபர் அருட் தந்தைக்கோ எங்களைப்பற்றி முறையிடாமல், எமது சுயகௌரவத்தைக் காப்பாற்றி வந்தார். எமது பிழைகளை முறையாகச் சுட்டிக்காட்டி அறிவுரைகள் கூறிக் கண்டித்துத் திருத்தி, மேலதிக தண்டனைகள் கிடைக்காமல் ஆவன செய்தார். எமது சுய கௌரவத்தைப் பற்றியும், சுயவிம்பத்தைப் பற்றியும் பெரிய எண்ணங்களுடனும் பரந்த மனப்பான்மையுடனும் அவற்றைக் கையாண்டார். மொத்தத்தில் தன்னுடைய சொல், செயல், எண்ணங்கள் மூலம் கிறிஸ்துவிற்கே சான்று பகர்ந்தார்!

நீங்கள் மிகவிரைவாக எங்களைவிட்டுப் பிரிந்துவிட்டீர்கள் என்று, துக்கத்தில் இருக்கின்றோம் ; எனினும், தங்களுடைய மாணவர்களாக இருந்தமை, எமக்குக் கிடைத்தற்கரிய பாக்கியம் என்றே கருதுகின்றோம். ஏனெனில், தங்களுடைய எடுத்துக்காட்டான வாழ்க்கைமூலம் நிறையப் பாடங் களைக் கற்றோம். 1995 ஆம் ஆண்டில், ஆண்டு 7 இல் விஞ்ஞான ஆசிரியை யாக இருந்தபோதும், பின்பு எப்போதெல்லாம் சந்தித்தோமோ அப்பொழு தெல்லாம் உண்டான இனிமையான, பசுமையான நினைவுகளை எப்பொழுதும் மீட்டிக்கொண்டே இருப்போம். அவை காலத்தால் அழியாதவை. தற்போது இறைவன், புனிதர்கள், வான தூதர்கள் மற்றும் மோட்சத்திலுள்ள ஆன்மாக் களிற்கான நேரம் - உங்கள் அழகிய புன்னகையினை இரசிப்பதற்கு! முடி வில்லாத ஒளி உங்கள்மேல் பிரகாசிப்பதாக! சமாதானத்தில் இளைப்பாறுவீர் களாக!

இவரது திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் இவரது அன்பான கணவர், சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன். சகல ஆறுதல்களின் கடவுளாகிய யேசுக் கிறிஸ்து, உங்கள் அனைவரையும் ஆற்றித் தேற்றுவாராக!

நன்றி!

மாணவர்கள் சார்பில்...
**றெனோல்ட் எட்வேட்.**
**69 / 2. வேம்படி வீதி.**
**யாழ்ப்பாணம்.**

(16. 05. 2022 இல், புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் ஆற்றிய உரை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவின் பின்னரும் வரலாறாய்...

அமரர் திருமதி மேசி ஜெயறோசா யேசுராசா அவர்கள், தனது உயர் கல்வியை யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடத்தில் நிறைவுசெய்து, புனித பத்திரிசியார் கல்லூரியில் 1983 ஆம் ஆண்டு, ஆரம்பப்பிரிவின் ஓர் ஆசிரியையாகத் தனது பணியை ஆரம்பித்தார். ஆரம்பப் பிரிவில் இவர் பணியாற்றியபோது குருளைச் சாரணரின் பொறுப்பாசிரியராக நியமிக்கப் பட்டார். பின்னர் 1986 இல், விஞ்ஞான ஆசிரியராக 6 ஆம், 7 ஆம், 8 ஆம் ஆண்டு மாணவர்கள் மத்தியில் பணியாற்ற நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து அவர் இளைப்பாறும் காலம்வரை, விஞ்ஞான பாடத்தை வியப்புறக் கற்பிக்கும் தேர்ச்சிபெற்ற ஓர் ஆசிரியையாக விளங்கினார்.

நான் 1986 ஆம் ஆண்டு, புனித பத்திரிசியார் கல்லூரியில் நியமனம் பெற்றுச் சென்றபோது, ஜெயறோசா மிஸ்சுடன் பணியாற்றும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றது. ஒரு நல்ல சகோதரியாக, நண்பியாக, தாயாக அவரை நான் காணமுடிந்தது! தான் கற்பிக்கும் பாடத்துறைக்கு மிகப் பொருத்தமான ஆளுமையை நான் அவரில் கண்டேன். எல்லோரிடமும் மதிப்புடனும், பண்புடனும் அவர் நடந்துகொண்டதனால், எல்லா மாணவர்களதும் ஆசிரியர்களதும் நன்மதிப்பையும் உயர் கணிப்பையும் பெற்றிருந்தார். விஞ்ஞான பாடத்தை உயிர்த்துடிப்புடன் கற்பிப்பதில் தனக்கெனத் தனித்துவ மான இடத்தைக் கொண்டிருந்தார் என்பதில் ஐயமில்லை!

கடமை ஒன்றே கண்ணானவர். "கடமையைச் செய் பலனை எதிர் பாராதே!" என்பது, பகவத் கீதையின் சாரம். எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பாராது, "நன்றி" என்ற சொல்லைக்கூட எதிர்பாராமல் கடமை புரிதல் என்பது, சாதாரண மனிதரால் முடியாத காரியம். நல்லாசிரியர் ஒருவர் பிரதி பலனை எதிர்பார்த்துச் செயற்படுபவர் அல்லர். ஒவ்வொரு கற்பாறைக்குள்ளும் அழகான சிலை உண்டு. தேவையற்ற கூறுகளை அகற்றிவிட்டு, அழகான சிலையைக் கொண்டுவருபவர்களே ஆசிரியர்கள். ஆகவே, "மிஸ்" அவர்கள் தனது கடமையில் கருத்தாகவும் கண்ணியமாகவும் இருந்து, ஒரு சிறந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பியாகத் தொழிற்பட்டு மாணவச் சிலைகளைச் செதுக்கியுள்ளார் என்பது, இங்கு வெள்ளிடை மலை.

நிறைவாக...

அன்பு, பண்பு, பரிவு, விடாமுயற்சி, பொறுமை, நம்பிக்கை, கல்லூரிப் பற்று என்ற அணிகலன்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டவர் எமது அன்புக்குரிய "மிஸ்". மாணவர்களின் உருவாக்கத்தில் மிகுந்த அன்பும் அதேவேளை கண்டிப்பும் ஊக்கமும் உற்சாகமும், ஒழுக்க விழுமியங்களைச் சொல்லிலும் செயலிலும் வாழ்ந்து காட்டியவர். அநேகருக்கு உப்பாக, ஒளியாகத் திகழ்ந்தவர். கல்லூரி நிர்வாகத்துடன் நிலைகுலையாமல் நின்று சாதித்தவர் இவர். கல்லூரியின் உயர்வுக்காய் ஊக்கத்துடன் உரமிட்டவர்!

சாவின் வரலாற்றில் மனித உயிர்கள் மறையலாம்; ஆனால், ஒவ்வொரு நிலையிலும் அம்மனிதர்கள் செய்த பணிகள் மறையாது என, உம்வாழ்வில் வாழ்ந்து காட்டினீர்!

சாவின் பின்னரும், உங்கள் வாழ்வின் பதிவுகள் அழியாமல் - வரலாறாய்த் தொடரும்!

இறைவன் நிழலில் அமைதியுடன் இளைப்பாறுங்கள்!
என்றும் நினைத்தாலே இனிக்கும்
உங்கள் நினைவுகளுடன் ...

- திருமதி ஆன்ரீடா ஸ்ரனிஸ்லாஸ்
ஆசிரியை.
யாழ்/ புனித பத்திரிசியார் கல்லூரி.

---

தொகுப்பு :
அ. யேசுராசா

நன்றி :
பிரசாந்
யோகி (ஓவியம் - அட்டை)
விடயங்களின் படைப்பாளிகள்
பரணீதரன்
இ.சு.முரளிதரன்
பரணீ அச்சகம், நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் அஞ்சலிகள் 5

## Bharaneetharan Kalamany

13 மே அன்றுAM 11:48 மணிக்கு

அன்புக்குரிய அ யேசுராசா சேர் அவர்களின் துணைவியார் இன்றைய தினம் காலை இறைவனடி சேர்ந்துவிட்டார். யேசுராசா சேர் வீட்டுக்கு மாதத்துக்கு 2 தடவை செல்வேன்... போகும் தருணங்களில் எல்லாம் இன்முகத்துடன் வரவேற்பார்... இனி அந்த அம்மாவைக் காண முடியாது என்பதை நினைக்க வேதனையாக உள்ளது. தனது துணைவியார்மீது யேசுராசா சேர் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டு இருந்தார். பல்வேறு வெளிநாட்டுப் பயணங் களில் இருவரும் மிக மகிழ்வாகப் பயணித்தார்கள்... யேசுராசா சேரின் பலமாகவும் இருந்தார். அம்மா அவர்கள், சென் பற்றிக்ஸ் கல்லூரியின் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். யேசுராசா சேருக்கு இந்த இழப்பைத் தாங்கும் சக்தியை இறைவன் கொடுக்க வேண்டும். அம்மாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம். நெருங்கியவர்களான மலரன்னை அம்மா கணவர், கோமகன், மாஸ்டர் சிவலிங்கம், மயிலங்கூடலூர் நடராசன், சத்தியபாலன் சேர் துணைவி எனத் தொடர் இழப்புகள் இந்த மாதத்தில். அனைவரது ஆத்மாவும் சாந்தி பெறட்டும்.

273 கருத்துகள்

## P A Jayakaran Arullingam

13 மே அன்று PM 5:13 மணிக்கு

"சுகமா..? அவவும் சுகமா...? அவவும் வந்தவவோ..?" அவர்களது வீட்டு விறாந்தையில் எழுத்தாளர் யேசுராசா அவர்களுக்காக காத்திருந்த தருணத்தில் அவர் என்னை எட்டி விசாரித்தார். அவர் சுகயீனமாய் இருப்பதாய் யேசுராசா அவர்கள் சொன்னார். கடுமையான சுகயீனத்தில் இருப்பதாய் நான் எண்ணவில்லை. மீள்வார் என்றே இருந்தேன். அவர்களை நான் பார்க்கச் சென்றபோது தன்னைக் கூட்டிச் செல்லவில்லையென எனது மனைவி கடிந்தார். கனடா வந்திருந்தபோது அக்காவுடனான ஒரு நாள் பழக்கம் அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாகவே பிடித்திருந்தது. திருமதி மேசி யேசுராசா அவர்களது பிரிவு இனிய நினைவுகளை எம்மிடையே விட்டுச் சென்றிருக்கின்றது. பிரிவின் துயரில் நாமும் இணைந்து கொள்கிறோம்.
44 கருத்துகள்

Ranjakumar Somapala
13 மே அன்று PM 3:01 மணிக்கு
நண்பர் யேசுராசாவின் துணைவி மறைந்தார். யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் சிட்னியிலும் அவருடன் பழகிய பொழுதெல்லாம் ஒரு அன்பான மூத்த சகோதரியுடன் பழகியது போல உணர்ந்தேன். இனிய பெண்மணி. அவருக்கு எனது அஞ்சலி. நண்பர் யேசுராசாவின் துயரில் பங்கு கொள்கிறேன்.
91 கருத்துகள்

• Amarathaas Artist
யேசுராசா அவர்களின் துணைவியாரது இழப்புத் துயரிற் பங்குகொள்கிறேன். இந்த நேரத்தில் அவரின் அருகில் இருந்து ஆறுதல் சொல்ல முடியவில்லை. அவர் மனதைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

Sithaparanathan Ramesh
16 மே அன்று AM 5:50 மணிக்கு
சத்தியபாலன் ஆசிரியரின் பாரியாரின் மரணத்தை தொடர்ந்து துரத்தும் தொடர் மரணங்கள் எம்மைத் தொடர்ந்தும் துன்புறுத்திக்கொண்டுள்ளன. சத்தியபாலன் ஆசிரியரின் துணைவியாரின் இழப்பிலிருந்து மீளமுடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தபோது அடுத்தடுத்து நிகழ்ந்த மூன்று மரணங்கள் என்னைக் கடுமையாகவே தாக்கின. மாஸ்டர் சிவலிங்கம், மயிலங்கூடலூர் நடராசன், மதிப்புக்குரிய யேசுராசா அண்ணனின் துணைவியார். ...எம்மோடு இனிமை யாகவும் அன்பாகவும் பழகிய, யேசுராசா அண்ணனின் துணைவியார் மேசி ஆசிரியையும் மறக்கமுடியாது. பெயருக்கேற்ப கருணையே வடிவானவர். வீட்டுக்குச் செல்லும் உறவினரை இன்முகத்துடன் வரவேற்று உபசரிக்கும் ஒருவர். செல்லும் நேரமெல்லாம் நாம் கேட்காமலே தேநீர், பழச்சாறு தந்து உபசரிக்கும் ஒருவர். செல்லும் நேரம் மிஸ் போயிட்டு வாரன் என்று குரல் கொடுக்கும்போது, அவரும் வந்து வழியனுப்பி வைப்பார். தேநீர் தரும்போது ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டுச் செல்வார். யேசு அண்ணருக்கு இது பலமான அடி... இப்பேரிடியில் இருந்து அவர் மீள்வது கடினமானது. இச்சமயத்தில் இலக்கிய நண்பர்களாகிய நாம் அவருக்கு உறுதுணையாக நின்று அவரோடு பயணிப்பதே சாலச் சிறந்தது. மேற்கொண்டு வார்த்தைகள் வராமையால் இத்தோடு நிறுத்திக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.
## பிரிதல்

ரஷ்ய மொழியில் : அன்னா அக்மதோவா

மாலை,
சரிவான பாதை என்முன்னால்.
"என்னை மறவாதே" என
காதலோடு அவன், வேண்டினான்.
இன்று வெறுங்காற்றும்,
இடையனின் அழு குரலும்மட்டும்.

தூய ஊற்றினருகில்,
"செடார்" மரங்கள் அலைப்புறு கின்றன.

- 1914

## 2.
## வெற்று இரவு....

ரஷ்ய மொழியில் : அன்னா அக்மதோவா

மகிழ்ச்சியிலும் துயரிலுமான என்
குரலுக்கு,
அந்த இதயம் இனி
பதில் தராது ;
எல்லாம் முடிந்தது.
நீ இல்லாமற் போன
அந்த வெற்று இரவுக்குள்,
எனது பாடல்
ஒலித்தபடி செல்லும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. உதயம்

ஸ்பானிய மொழியில் : ஜுவான் றேமன் ஜிமெனெஸ்

யாருக்கும் சொந்தமில்லா
ரயில் நிலையத்தை ரயில்
அடையும்போது
தோன்றும் துக்கத்தை உதயம்
கொண்டு வருகிறது.

எவ்வளவு பலமாய்க் குரல்கள் ஒலிக்கின்றன!
யாரும் அறியும்
இந்த நாளின் குரல்கள்
நிலையற்றவை
ஓ.... என்னரும் வாழ்க்கையே!

அங்கே இப்போ
உதயத்தின் வருகையோடு
ஒரு
குழந்தையின் அழுகுரல் ....

## 4. முடிவு

ஆங்கிலத்தில் : லாங்ஸ்ரன் ஹியூஸ்

சுவரின்மீது அங்கே
மணிக்கூடுகள் இல்லை
காலமும் இல்லை,
காலைதொடங்கி மாலை வரைக்கும்
தரையின் குறுக்கே நகரும்
நிழல்களும் இல்லை.

கதவின் வெளியே
அங்கு,
இருளும் இல்லை;
ஒளியும் இல்லை.

அங்கு கதவே இல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பிரியாவிடை

ஸ்பானிய மொழியில் : ∴பெடரிக்கோ கார்சியா லோர்கா

நான் இறந்து போனால்
பல்கனியைத் திறந்தபடி விடு.

சிறுவன் தோடம் பழங்களைத் தின்கிறான்
(பல்கனியிலிருந்து அவனைப் பார்க்கிறேன்)
அறுவடையாளன் தானியத்தை அறுக்கிறான்
(பல்கனியிலிருந்து அதைக் கேட்கிறேன்)

நான் இறந்து போனால்
பல்கனியைத் திறந்தபடி விடு.

## 6. நிலை மயக்கம்

ரஷ்ய மொழியில் : ஜோசப் ∴ப்ரொட்ஸ்கி

மேரி இப்பொழுது கிறீஸ்துவிற்குச் சொல்கிறாள் :
'நீர் கடவுளா அல்லதென் மகனா ?
சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டீர்.
நான் வீடுசெல்லும் பாதை எங்கே அமைந்திருக்கிறது ?

அறிந்துகொள்ளாமல்,
என் கதவைக் கடந்து நான் போக முடியுமா?
நீர் இறந்தீரா அல்லது உயிருடனா?
நீர் கடவுளா அல்லது என் மகனா?'

பதிலாக,
கிறீஸ்து அவளிற்குச் சொல்கிறார்:
"இறந்தேனோ இல்லை உயிருடனோ
பெண்ணே,
எல்லாம் ஒன்றுதான்;
மகனோ அல்லது கடவுளோ,
நான் உன்னுடையவன்!'

(ஆறு கவிதைகளையும் ஆங்கிலம் வழி தமிழில் : அ. யேசுராசா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பற்றி...

முன்னுரை :

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது சான்றோர் வாக்கு. வாழ்க்கை எனும் ஒழுக்கம், பண்பு, ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, பொது அறிவு என்பன அனைத்தும் நிறைந்த பாடத்தை மாணவர்களுக்குச் சிறந்த முறையில் கற்பித்து, ஓர் உண்மையான வழிகாட்டியாக விளங்கி, ஒவ்வொரு மாணவரையும் சிறந்த மனிதராக்குவது ஆசிரியர்கள்தான்.

அத்தகைய எழுச்சிமிக்க மாணவர்களை ஒரு சிறந்த ஆசிரியரால் தான் உருவாக்க முடியும். இத்தகைய பெருமை வாய்ந்த ஆசிரியரைப் பற்றி நோக்குவோம்.

யார் ஆசிரியர்? :

எக்காலகட்டத்திலும் எவர் ஒருவர் எவ்விடத்திலும் புதுமையான ஒன்றை அறியச் செய்கிறாரோ அவரே ஆசிரியராவர். அவ்விதத்தில் பூமியில் வாழும் அனைவரும், ஏன், சிறு மண்புழுகூட மண்ணை உரமாக்கும் பாடத்தைக் கற்றுத் தருகிறது. அவ்வகையில் அனைத்துமே ஆசிரியர்தான்.

"சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்" எனும் பழமொழிக் கிணங்க, மனிதன் பகுத்தறிவு எனும் ஆறாம் அறிவுடன் பிறந்து இருந்தாலும், அவ்வறிவைப் பயன்படுத்த ஒரு வழிகாட்டி அவசியம் தேவை.

ஏனென்றால், மனிதன் மற்றவர் செய்கை மற்றும் நடத்தையைக் கண்டு, அதைத் தன் வாழ்விலும் பிரதிபலிக்கிறான். அந்நடத்தைகளில் சரி எது தவறு எது எனத் தரம் பிரித்து, சரியான பாதையை வழிகாட்டுபவரே ஆசிரியர் ஆவார்.

ஆசிரியரின் அடையாளம்:

ஆசிரியர் என்பவர் ஒட்டுமொத்த உலக அறிவையும் ஒரே இடத்தில் அறியச் செய்பவர். அவர் புதிய அறிவையும், அவ்வறிவைப் பயன்படுத்தும் விதத்தையும் ஒருங்குசேர வழங்குபவர்.

ஒவ்வொரு இடத்திலும் புதுமையான ஏதோ ஒன்றைக் கற்றுக்கொள்வது சுலபம். ஆனால், ஒரே இடத்தில் தொடர்ச்சியாக ஒருவர் கற்பது என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடினமானதொன்றாகும். அதனை எவ்வித சலிப்பும் ஏற்படாவண்ணம் பல யுக்திகளைக் கையாண்டு, கவனம் சிதறாமல் கற்பிப்பதே ஆசிரியருக்கான அடையாளம் ஆகும்.

**ஆசிரியரின் பண்பு :**

கற்கவேண்டியது உலகில் ஆயிரம் இருந்தாலும் எவை கற்க உகந்தவை என, அன்னப் பறவையாய் அறிவைப் பிரித்து வழங்குவதோடு, நற்பழக்க வழக்கங்களை உடல் மொழியாலும், கருத்தாலும் உணர்த்துவதே ஆசிரியரின் பண்பாகும்.

விரலுக்கேற்ற வீக்கம் என்பது போல, அறிவுக்கு ஏற்ற அனுபவத்தை வயது வாரியாக வழங்குபவர். தன்னை நாடி வருவோரின் சந்தேகங்களைத் தெளிவடையச் செய்பவர். சிந்தனையை கற்பனை உலகிற்கு அழைத்துச் சென்று, கருத்தைக் கண்முன்னே காட்டுபவர். இவையெல்லாம் ஆசிரியரின் பண்புகளாகும்.

அத்துடன், மனதால் யாரையும் புண்படுத்தாத புத்தனாக, அள்ளி வழங்கும் கல்விக் கர்ணனாக, பலதரப்பட்ட அறிவைச் சுமக்கும் ஞானியாக, கண்களால் மனதை அளவிடும் உளவியல் வல்லுநராக, அன்பாய் அறிவை ஊட்டும் அன்னையாக, ஏற்றத் தாழ்வு இல்லாமல் போதிக்கும் நியாயபதியாக, போதனையால் புதிய உலகை உண்டாக்குபவராக, போட்டி நிறைந்த உலகில் போராடத் தேவையான அறிவாயுதத்தை வழங்குபவராக, கண்ணைப் போலப் பாதுகாக்கும் இன்னொரு பெற்றோராக இருப்பதும் ஆசிரியருக்கே உரித்தான பண்புகளாகும்.

**ஆசிரியரின் பணி :**

ஆசிரியர் பணி என்பது வெறும் கல்வியை மட்டும் போதிப்பது இல்லை. ஒழுக்கம், பண்பு, ஆன்மீகம், பொது அறிவு என அனைத்தையும் மாணவர்களுக்கு எடுத்துக்கூறி, அவர்களைச் சிறந்த மனிதர்களாக்கும் உன்னதப் பணியாகும்.

அப்படிப்பட்ட தெய்வீகமான பணியை மாணவர்களுக்கு அளிக்க - தன்னலமற்ற, தியாக மனப்பான்மை கொண்டவராக இருந்தால் மட்டும் போதாது ; கற்பிக்கும் தொழிலை நேசிப்பவராகவும் இருக்கவேண்டும். அவர்கள் தான் உண்மையான பணிக்குரிய ஆசிரியர்களாவர்.

**ஆசிரியரின் சிறப்புக்கள் :**

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என ஆத்திசூடியில் பாடியிருக்கிறார் ஔவையார். ஆசிரியர் என்பவர் இறைவனுக்குச் சமமாகப் பார்க்கப்படுபவர். அந்த வகையில், மனித வரலாற்றில் பிரிக்க முடியாத, மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தின் அச்சாணியாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள்.

ஒரு குழந்தையை முதன் முதலில் இந்தப் பூமிக்குக் கொண்டு வருபவள் தாய். இரண்டாவதாக, அந்தக் குழந்தையைச் சான்றோன் ஆக்குபவர் தந்தை. மூன்றாவதாக, அந்தக் குழந்தையைத் தன் சொல்லாலும் எழுத்தாலும் ஒரு மனிதனாக உருவாக்குபவரே ஆசிரியர். எனவேதான் தெய்வத்திற்கு முன் மூன்றாமிடத்தில் ஆசிரியரை வைத்திருக்கின்றனர் நம் மூதாதையர்.

ஒரு மாணவனைத் தன்னம்பிக்கை மிகுந்த மனிதன் ஆக்குவது ஆசிரியர்கள்தான். இப்படி மாணவர்களின் வாழ்வில் ஒரு பெரும் பங்கை வகிப்பதால்தான், ஆசிரியர்கள் என்றும் போற்றப்படுகின்றனர்.

மேலும், ஆசிரியர்களைக் கௌரவிக்கும் விதமாக அவர்களுக்கு, தமிழக அரசினால் "நல்லாசிரியர் விருது" வழங்கப்படுகிறது.

அவ்வாறே இந்தியாவில் தன் வாழ்நாள் முழுவதும் ஒரு நல்லாசியராக வாழ்ந்து காட்டிய, முனைவர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்ரெம்பர் 5 ஆம் நாளைத்தான் ஆசிரியர் தினமாகக் கொண்டாடு கின்றனர்.

முடிவுரை :

விதைகள் விதைக்கப்படலாம் ; விதைக்கப்பட்ட விதைகள் எல்லாம் முளைப்பதில்லை; முளைத்த செடிகள் எல்லாம் மரமாவதில்லை.

என்னால் விதைக்கப்பட்ட விதை என்றாவது ஒருநாள் ஆலமரமாய் வேரூன்றி நிழல் பரப்பும் என்ற நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும், "நடப்பது நடக்கட்டும், போற்றுவோர் போற்றட்டும், தூற்றுவோர் தூற்றட்டும்" என்று, குன்றிலிட்ட விளக்காய்ப் பிரகாசித்து, குன்றாப் புகழோடு இருந்து கல்வியைக் கற்றுக்கொடுப்பது ஆசிரியர்கள் மட்டுமே என்பதில், எவ்வித ஐயமுமில்லை!

- நன்றி : இணையம்

---

"விடுதலை இறையியலின் மிகவும் துல்லியமான அடிப்படை, "இயேசு கிறிஸ்து விடுதலை அளிப்பவர்" என்பதாகும். (லூக்கா 4 : 17 - 18). தனது பணிப் பிரகடனத்தில் "விடுதலை வழங்க வந்தேன்" என முழங்கிய இயேசு, சமய அடிப்படையில் அமைந்த ஆன்மிக விடுதலையை மட்டும் கருதவில்லை. சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய அனைத்தும் உள்ளடக்கிய முழு மானுட விடுதலையை வலியுறுத்தினார். அதைத் தனது போதனைகளில் வலியுறுத்தியது மட்டுமல்லாது செயற்பாடுகளிலும் வெளிப்படுத்திச் சான்று பகர்ந்ததை புதிய ஏற்பாட்டின் நற்செய்திகள் ஆவணப்படுத்தி யுள்ளன. இதனையே விடுதலை இறையியல் தனது ஆரம்பப்புள்ளியாகக் கொண்டு விருத்தியடைந்துள்ளது" (J. D. Turner, 1994, 12).

- அருட்பணி யோ. கி. போல் றொகான்

நன்றி! : மானுடமைய இறையியற் செல்நெறிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி பகிர்தல்...!

அண்மையில் காலமாகிய எனது அன்பு மனைவி மேசி ஜெயறோசாவுக்கு, மருத்துவமனையில் உரிய அக்கறையுடன் சிகிச்சை வழங்கிய மருத்துவர்கள் தனேந்திரா, ரஜீவ் ; தாதிகள், ஊழியர், பராமரிப்பில் உதவிய சகோதரி கியூரிக்கும்; பல்வேறு வழிகளில் உதவிய உறவினர் நெவின், கி. நெல்சன், றூபன் ஆகியோருக்கும்; சோ. தேவராசா, வடகோவை வரதராஜன், சி. ரமேஷ் ஆகியோருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள்!

மரணச்செய்தியை அறிந்து, முகநூலிலும் நேரிலும் தொலைபேசி வழியாகவும் துயர் பகிர்ந்த அனைவருக்கும் ; 31 ஆண்டுகள் விஞ்ஞான ஆசிரியையாக மேசி பணியாற்றிய புனித பத்திரிசியார் கல்லூரியில் பூதவுடலை வைத்து - அஞ்சலி நிகழ்வை ஒழுங்கமைத்த, உப அதிபர் அருட்பணி மகன் அலோசியஸ் அவர்களுக்கும், எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேசியை அறிந்த அனைவர் மனங்களிலும் அவர் வாழ்வார் என்பது உறுதி!

மனிதர்களை என்றும் மரணத்தின் மூலம் பேரியற்கை தோற்கடிக்கிறது!

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு" என்ற
குறள் வரிகளை நினைந்து அமைதியுற, நானும் முயல்கிறேன்.

– அ.யேசுராசா

183 கருத்துகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

- Maunaguru Sinniah

ஆறுதல் அடைக!

- Amarathaas Artist

உங்கள் நினைவுகளோடு அவர் நினைவுகளும் கலந்தே என்னுள் வாழ்கின்றன. உங்கள் இழப்பின் கனம் பெரிது. காலம் அதைக் குறைக்கட்டும்.

- Constantine Francis

அத்தையின் ஆன்மா இறை அன்பில் இளைப்பாற பிரார்த்திக்கின்றேன்.

.• Thaas Cartoonist

ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காலம்தான் நம் காயங்களை ஆற்றவேண்டும். அமைதி அடைக.

- Malathi Maithri

ஆழ்ந்த இரங்கல் தோழர்!

- Mahendran Thiruvarangan

My deepest condolences. RIP. Holding you in my thoughts.

- Vickneaswaran Sk

ஆம். அதுவே எம்மெல்லோர்க்கும் ஆறுதல் தருவது. காலம் மிகச்சிறந்த பரிகாரி. உங்கள் மனத்தையும் அது ஆற்றுப்படுத்தட்டும்.

- Murugan Sivalingam

நண்பர் யேசுராசா குடும்பத் துணையை இழந்தமை அறிந்து வேதனை பகிர்கின்றேன். உங்களது தொலைபேசி இலக்கம் கிடைக்காமல் தொடர்பு கொள்ள முடியவில்லை. ஆழ்ந்த இரங்கல்...

- Pathmanathan Ranjani

அவர் எப்பவும் உங்களோடு பயணிப்பார், ஆறுதல் கொள்ளுங்கள்.

- Thevarasa Mukunthan

எமது ஆசிரியையின் ஆன்மா சாந்தியடைவதாக.

- Sithaparanathan Ramesh

ஆறமுடியாத காயம். வலியோடு தொடர இருக்கும் கணங்களுக்காய் வருந்துகின்றேன்.ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ஆதிலட்சுமி சிவகுமார்

அன்னாரின் இழப்பு நிச்சயமாக ஆற்றொணாத துயரம்தான். அவரை நேசிக்கின்ற உள்ளங்களில் அவர் நிலைத்துவாழ்வார் என்பதுதான் உண்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• செ.அன்புராசா

அன்புக்குரியவர்களின் இழப்புக்கள் ஈடுசெய்யப்பட முடியாதவை! அமைதிபெற வேண்டுகின்றேன். அமைதியில் இளைப்பாறுவாராக.

• Saddanathan Kanagaratnam

So sad.

• Vetrichelvi Velu

பிரிவின் துயரத்தை நல் நினைவுகள் இல்லாமலாக்குவதாக. ஆறுதல் அடையுங்கள்.

• Laleesan Laleesan

கடவுள் உங்களுக்கு ஆறுதலைத் தரட்டும். அம்மையாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

• Maani Nagesh

துணையாளின் ஆன்மா ஈடேறவும் தங்கள் மனம் திடம் பெறவும் பிரார்த்திக்கிறேன்.

• Ananthy Sivagnanasundram

அதீத அன்புக்குரியவரை இழந்து நிற்கும் உங்கள் இதயம் அமைதி பெற பிரார்த்திக்கிறேன்

• Dr.Muttiah Kathiravetpillai Muruganandan

பேரிழப்பு. இருந்தாலும் மனதை அமைதிப்படுத்த முயலுங்கள்.

• Kandiah Murugathasan

மனைவி என்பவர் துணைவி மட்டுமல்ல கணவனின் எல்லாமாகவுமே இருப்பவர். சொல்லப் போனால் ஒரு கணவனின் அரைப்பங்குக்கு மேல் மனைவிதான் நிறைந்து நிற்பவர். அதுவும் தங்களைப் போன்ற எழுத்தாளருக்கு இது பெரும் இழப்பும் கவலையுமாகும். எதனாலும் எக்காலத்திலும் நிரப்ப முடியாதது. அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்து அஞ்சலி செய்கின்றோம்.

• Ampalam Vijayanathan

அமைதி கொள்ளுங்கள்.... என்பதே இயற்கைக்கு ஈடான எமது ஆறுதல்....
நினைவுகள் சுமந்து வாழுங்கள் சேர்...

• Joseph Johnson Rajkumar

மறப்பதும் ஏற்பதும் எளிதல்ல.. காலம் தான் மருந்து.. கடந்து செல்லுங்கள்...

• Balasingam Xavier

அண்ணா அன்புக்குரியவரின் இழப்பு ஈடுசெய்யமுடியாத இழப்பு. உங்கள் துயரத்தில் நானும் பங்கு கொள்ளுகின்றேன்.உங்கள் இதயம் அமைதியுறவும், உங்கள் அன்புக்குரியவரின் ஆன்மா இறைவனடியில் இளைப்பாறவும்,எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Cheran Rudhramoorthy

அமைதியும் அன்பும் நிறைந்தவர். உங்கள் வாழ்க்கைக்கு அளப்பரிய உந்துதலும் ஆத்மபலமும் சேர்த்தவர் அவர்.

• Pathma So

மறைவின்பின் உங்கள் இருவருக்கும் இடையிலிருந்த அன்பின் பிணைப்பை அதிகம் உணர்ந்து கொண்டேன்!

• மன்னார் அமுதன்

ஆழ்ந்த இரங்கல் ஐயா... நாங்கள் உங்களுக்கு சின்னப் பிள்ளைகள். ஆனாலும் மனைவியை இழப்பது ஒரு பெரும் வலி என்பது எனக்குத் தெரியும்.

• Nedra Rodrigo

My condolences. May she Rest In Peace.

• Raveendran Chelliah

Rip

• இரவி அருணாசலம்

மனம் மிகத் துக்கித்தேன். மீண்டு வாருங்கள்! மீண்டு வருவீர்கள்!

• Vel Nanthan

ஆறுதல் கொள்க. உங்கள் வாழ்வில் அவர் இணைபிரியாதுணையாய் இருந்தார் என்பதை அறிவோம். இலக்கியமும் மனத்திடமும் கொண்டு மீள்க.

• Kanagaratnam Balendra

ஆழ்ந்த அனுதாபங்கள். துயரில் பங்கு கொள்கிறோம்.

• Vinotharan Nadarajah

காலம்முழுக்க கூட வருவார், ஆழ்ந்த இரங்கல் !

• Subramaniam Ratnasabapathy Sivasubramaniam

ஆழ்ந்த அனுதாபங்கள், யேசுராசா. ஈடுகட்டமுடியாத இழப்பு. காலம் யாவற்றையும் விரைவில் சரியாக்குமென எதிர்பார்ப்போம்.

• Bubsy Mariathasan

நினைவுகளில் வாழ்கிறார். இறைவனில் இளைப்பாறட்டும்.

• Chinniah Ratnavadivel

உங்கள் துயரத்தில் நாமும் பங்கெடுத்துக்கொள்கிறோம். மிகுந்த அடக்கமும் பொறுமையும் கொண்டவர். எங்கள் அன்புக்குரிய யேசுரட்ணம் மேளின் அவர்களது பாசமிகு அக்கா!. ஆண்டவன் திருவடி நீழலில் அன்னாரின் ஆன்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்!

• Vadakovay Varatha Rajan

நினைத்து நினைத்து துக்கிக்கும் பேரிழப்பு .

மீண்டு வாருங்கள் .

000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org